# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 03.03.2026**

**OS.No. 142/2012**

**வழக்கு சாட்சி PW.1.– கலைவேந்தன் , த/பெ. பாலசுப்பிரமணி**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும்போது முதலில் 8 ஆவணங்களும், அதன்பிறகு சாட்சியத்தின்போது 8 ஆவணங்களும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. தாவா 1ம் இலக்கச் சொத்தின் கிழக்கே சர்வே எண் .319 நிலமும், மேற்கே நடைபாதையும், வடக்கே சர்வே எண் .327 நிலமும், தெற்கே சர்வே எண்.314 நிலமும் உள்ளது. தாவா சொத்தின் முதலாவது அட்டவணை சொத்தின் விஸ்திரனம் 2 ஏக்கர் 12 சென்ட் நிலமும், 2 வது இலக்கச் சொத்தின் 2 ஏக்கர் 52 சென்ட் விஸ்திரன நிலமாகும், மொத்தம் 4 ஏக்கர் 64 சென்ட் நிலமாகும். என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.15 ஆவணத்தில் வடக்கே சர்வே எண்கள்.299, 284 நிலமும், தெற்கே சர்வே எண்.271/24 என்ற நிலமும், கிழக்கே சர்வே எண்.282 நிலமும், மேற்கே சர்வே எண்.293 நிலமும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், வில்லங்கச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் தவறு என்றால் சரியல்ல.

வாதுரையில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லை விபரங்கள் தவறு என்றால் அது வாய்காரலாக பேசப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள எல்லை விபரங்கள் ஆகும் . நான் வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமால் எல்லைக்கொண்ட இடத்திற்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 2ம் இலக்கச் சொத்தின் சர்வே எண்கள்.271/17, 271/19,

271/22 ஆகும். சர்வே எண் .271/17 ன் நான்குமால் விபரம் என்னவென்றால் சர்வே எண்கள் . 271/17, 271/19, 271/22 ஆகியவற்றிக்கு ஒரே நான்குமால்தான் உள்ளன . அது மேற்கேயும், கிழக்கையும் நடைபாதையும் , வடக்கே பன்னீர்ச்செல்வம் நிலமும், தெற்கே வாத்தியார் பாலுச்செட்டியார் என்பவரது நிலமும் உள்ளது . சர்வே எண் .271 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதால் அதற்கு வெவ்வேறு நான்குமால் விபரங்கள் உள்ளது என்றாலும் , அதை மறைத்து ஒரே நான்குமால்தான் உள்ளது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சர்வே எண்.271 ன் உட்பிரிவு தான் சர்வே எண்கள். 271/17, 271/19, 271/22 ஆகிய சர்வே எண்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் அமைக்கக்கோரி நான் மனு செய்து நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான் . பார்வையிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துவிட்டாரா என்றால் இல்லை, சௌந்தரபாண்டியன், திருமூர்த்தி ஆகியோர் தடை ஏற்படுத்திவிட்டதால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை. மாவட்ட வன அலுவலருக்கு நான் ஒரு மனு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான் . அந்த மனுவில் வழக்கு தாவா சொத்தின் அனைத்து சர்வே எண்கள் விபரங்களும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . வன அலுவலரிடம் கொடுத்த மனுவில் சர்வே எண்கள் அமைந்துள்ள இடம் குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன் . அந்த மனுவில் நிலம் அமைந்துள்ள இடம் குறித்து எந்த விபரமும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல . நான் கொடுத்த மனுவின்பேரில் வன அதிகாரிகள் இடத்தை பார்வையிட்டார்களான என்றால் பார்வையிட்டார்கள் . அதன்பேரில் எனக்கு எதுவும் அறிக்கை வழங்கப்பட்டதா என்றால் இல்லை, ஆனால் பிரதிவாதி சௌந்தரபாண்டியன் மீது வழக்கு பதிந்தார்கள்.

அந்த குற்ற வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.271/1 எனக்கு பூர்விக பாத்தியப்பட்டு, அதன்பிறகு அரசால் நிலம் ஒதுக்கப்பட்டு எனக்கு அந்த நிலம் என் பெயரில் வழங்கப்பட்டது. எனது தாத்தா பெயர் பரமசிவம் செட்டியார் எனது அப்பாவின் அப்பா ஆவார். பிரதிவாதி எனது அம்மாவுடன் பிறந்த அண்ணன் எனக்கு தாய்மாமா ஆவார். சர்வே எண்கள். 271/17, 271/19, 271/22 ஆகிய சொத்துகள் எனது அண்ணன் இளங்கோ எனக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்து அதன்பேரில் எனக்குக் கிடைக்கப்பெற்றது. நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ.5 அனுபவ சான்று ஆவணத்தில் சர்வே எண் .271/1 குறித்த அனுபவ விபரம் மட்டும்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்கள். 271/17, 271/19, 271/22 அனுபவம் குறித்து கிராம நிர்வாக அலுவலரின் சான்று எதுவும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. (சாட்சியிடம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் வா.சா.ஆ. 5 ஆவணம் காட்டப்பட்டு , எந்த வருடம் வா.சா.ஆ.5 வாங்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் எழுப்பிய கேள்விக்கு வாதி தரப்பு வழக்கறிஞர் அதில் தேதி சரியாக தெரியவில்லை என பதிலளித்ததை கேட்டுக்கொண்டு சாட்சி ஆவணத்தில் தேதி சரியாக தெரியவில்லை என சாட்சியம் அளித்தார்).

நான் மாவட்ட வன அலுவலருக்கு அனுப்பிய கடிதத்தில் சர்வே எண் .292 தொடர்பாகத்தான் நடவடிக்கைகோரி மனு செய்தேன் என்றால் சரியல்ல. மாவட்ட வன அலுவலரும் சர்வே எண்.292 தொடர்பாகத்தான் நடவடிக்கை எடுக்கச்சொல்லி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல . சர்வே எண்.292 சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்த வா .சா.ஆ.3 ஆவணம் சர்வே எண் .271/1 நிலம் மட்டும் தொடர்புடைய ஆவணம் என்றால் சரியல்ல . சர்வே எண்கள். 271/17, 271/19, 271/22 தொடர்புடைய அடங்கல் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.17 " அ " பதிவேடு ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் .271/1ல் வீடு உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்கள். 271/17, 271/19, 271/22 வீடுகள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை . தாவா சொத்தில் எனது அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா , அடங்கல் ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் . 1983 முதல் தற்போதுவரை நான்தான் அனுபவத்தில் உள்ளேன் . பிரதிவாதி எந்த தேதியில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்தார் என்றால் தேதி எனக்கு குறிப்பிட்டு நினைவில்லை.

சர்வே எண் .292 மற்றும் சர்வே எண் . 271/1 வெவ்வேறு சொத்துகள் என்றால் சரிதான் . எனது சொத்துக்கள் எங்கு உள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றாலும் , பொய்யான சங்கதிகளை கூறி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல . எனக்கு தாவா சொத்துக்களில் நான்குமால் விபரம் தெரியாத காரணத்தால்தான் நீதிமன்ற ஆணையர் விசாரணை கோரினேன் என்றால் சரியல்ல. அந்த இடம் எங்கு உள்ளது என்ற விபரம் முறையாக இல்லாத காரணத்தால்தான் நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையை சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மதுரையில் வசித்து வருகிறேன் என்றாலும், அதனால் தாவா சொத்து விபரம் மற்றும் அது எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.04 18:20:30 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.